1975 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, ஜாக்கிரதையாக இருந்து நடவடிக்கை எடுத்த காரணத்தால் தான் 169 வழக்குகளைப் போட்டு இருக்கிறார்கள். அவர்கள் மேலும் நல்ல முறையில் பணியாற்ற வேண்டிய வசதிகள் வேண்டு மென்று கேட்டு இருக்கிறார்கள். அதாவது, ஆயுதங்கள், ஜீப்புகள், சிப்பந்திகள் வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதை நல்ல முறையில் ஏற்படுத்திக் கொடுக்க இருக்கிறோம். அதை இன்னும் சற்று அதிகப்படுத்த வேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, திம்பம் போன்ற காடுகளில் உள்ள நிலங்களை விவசாயிகளுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் காடுகளில் சந்தனமரங்கள் ஏராள மாக இருக்கின்றன. அதனால் அதைத் தடுக்க முடியாமல் இருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தி தனியார்கள் அடிக்கடி சந்தனமரங்களை கடத்திக் கொண்டு போக வருகிறார்கள். இது சர்க்கார் பாரஸ்ட், இதிலே தனியார் விவசாயத்தை நீக்கி விட்டால், இப்படிப்பட்ட நிலைமையேற்படாது, ஆகவே, அரசாங்கம் இதற்காக என்ன செய்ய இருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தனியான ஒரு பிரச்னை குறித்துச் சொல்கிறார்கள். அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) விவசாய அமைச்சர் கவனத்தை ஈர்க்க கொடுக்கப்பட்ட அறிவிப்பு எடுத்துக்கொள்ளப்படாதது குறித்து

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நேற்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் ஆதித்தனார் அவர் களின் கவனத்திற்கு எங்கள் கட்சியின் உறுப்பினர் சௌந்தர பாண்டியன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தது குறித்து ஒரு ஒழுங்குப்பிரச்னை எழுப்பினேன். அந்தத் தீர்மா[illegible]கொடுத்து இரண்டு மாதம் ஆகியும் இன்னும் அறிக்கை

[திரு. க. உரொ. எட்மண்ட்]

அளிக்கப்படவில்லை. தாங்கள் அதற்குத் தீர்ப்பு அளிக்கிற நேரத்தில், நாளைய தினம் கடைசி நாளாக இருப்பதால், கூடிய மட்டும் பதில் கொடுக்க வேண்டுமென்று தாங்கள் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு இருக்கிறேன் என்று சொன்னீர்கள். இன்றைய தினம் கடைசி நாள். இன்றைய தினம் அஜெண்டாவில் ரூல் 41-ல் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. நம்முடைய அமைச்சர் அவர்கள் தலைவர் அவர்கள் கொடுத்த தீர்ப்பை மதிக்கிறார்களா, அல்லது..............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த மாதிரி கேட்கக் கூடாது. அந்தத் தீர்மானம் என்ன ஆயிற்று என்று கேளுங்கள்.

(முற்பகல் 10-00)

THIRU G. R. EDMUND: Mr. Speaker, you have already given a requisition to the Hon. Minister for answering the Rule 41 motion given notice by our party Member........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன ஆயிற்று என்று கேளுங்கள், நான் அதற்குப் பதில் சொல்லுகிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: ரூல் 41-ன் கீழான அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் அவைக்குமுன் வைக்கப்படவில்லை; அமைச்சர் அவர்கள் அதிலே பதில் தயாராக இல்லை என்று சொல்வதிலிருந்து அது என்ன ஆகியிருக்கிறது என்று எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. பேரவைத் தலைவர் அவர்களை நாங்கள் கேட்பதெல்லாம்,
at least he should bring an amendment to Rule 41, fixing a limitation within which—within the prescribed number of days—Rule 41 motion replies and also short notice questions should be taken up on the floor of the House.

திரு. இராம அரங்கண்ணல்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நானும் எதிர்கட்சியிலே இருந்தபொழுது இப்படி பல தடவை எழுப்பியிருக்கிறேன். கேட்டதற்கெல்லாம் பதில் அளிக்கப்பட்டதில்லை. எனவே, இதிலே அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கத் தான் வேண்டுமா என்ன?

DR. H. V. HANDE: On a point of order, Sir. Our Rule clearly specifies that once the Speaker allows a call attention notice, then the Minister concerned has to reply. Otherwise, at the earlier stage itself, the Minister should have got it disallowed. After the Speaker has

[டாக்டர் எச். வி. ஹண்டே]

allowed it, what is the difficulty of the Hon. Minister, Mr. Adityan? All other Ministers have been answering similar notices, but why should Mr. Adityan alone be refusing to answer? That is the problem raised by the hon. Member Thiru Edmund, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கும் பொழுது மாண்புமிகு அமைச்சருக்கு தெரிவிக்கப் படுகிறது. அமைச்சரின் அறிக்கை அலுவலகத்திற்கு வந்த பிறகு இந்த அவைக்குக் கொண்டு வந்துவிடுகிறோம். சில நேரங்களிலே எத்தனையோ கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கு அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கும்பொழுது சபை முடியும் நிலைமை ஏற்படுமானால் அது உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டும் வந்திருக்கிறது. அது புதுமை இல்லை. அந்த அறிக்கையை தயாரிக்க கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதிலே கனம் உறுப்பினர் திரு. எட்மண்ட் சொன்னது போல், இதிலே ஒன்றும் காலவரையறை வைக்கப்படவில்லை. ஆகவே, அமைச்சரை நாங்களும் வற்புறுத்திதான் வருகிறோம். எவ்வளவு விரைவிலே கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவாகக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். சில நேரங்களிலே காலதாமதம் தவிர்க்க இயலாது.

திரு. கே. எ. வகாப்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி அனுமதி மறுக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எழுப்புவது முறை இல்லை.

(ஆ) சைகோன் நாட்டிலே தெற்கு வியட்நாம் போர் காரணமாக தமிழ் நாட்டு வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள அவதி குறித்து

திரு. கே. எ. வகாப்: நான்கு ஆயிரம் தமிழர்களின் உயிர் உடைமை என்ன ஆவது? அதிலே நமக்கு அக்கறை இல்லையா? இன்றையத் தினம் சைகோன் நாட்டிலே தெற்கு வியட்நாம் போரிலே சிக்கலிலே மாட்டிக் கொண்டிருக்கின்ற தமிழ் நாட்டிலேயிருந்து போன 3 ஆயிரம், 4 ஆயிரம் வியாபாரிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா போன்ற நாடுகள் அக்கறை கொண்டு அவர்களை கப்பல் மூலமாகவும், விமானம் மூலமாகவும் வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பார்லிமெண்டிலே கேட்கப்பட வேண்டிய கேள்வி அது.